மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது விளவங்கோடு வட்டத்தில் உள்ள எல்லா அரசு துவக்க, நடுநிலை, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மலையாள ஆசிரியர்களே மலையாளப் பிரிவுகளுக்கு நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

*825 வினா— திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந் நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும், பெரும்பான்மை யான பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகளும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டம் 1980-ம் ஆண்டு மார்ச்சு திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது;

திரு. சி. மாணிக்கம் ; தமிழ் நாட்டில் பெரிய நகரங்களாக இருக்கும் நகரங்களில் ஒன்றாக இருக்கும் திருச்சி நகரில் செயல் பட்டு வரும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதேனும் மானியம் கொடுத்துள்ளதா ? எவ் வளவு தொகை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந்நிலையிலுள் ளது என்பது. எந்நிலையிலுள்ளது என்பதை விளக்கிவிட்டேன்.

திரு. கூ. சு. முருகேசன் ; இந்தப் பாதாளச் சாக்கடைத் திட் டம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? இந்தத் திட்டத்தினால் திருச்சியிலுள்ள குழாய்கள் எல்லாம் பறிக்கப்பட்டு தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் சீக்கிரம் முடிக்க முடியுமா ? பொன்மலை நகராட்சிக்கும், ஸ்ரீரங்கம் நகராட்சிக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திருச்சி வடிகால் திட்டத்திற்கு அரசு 1970 ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. அப் போது திட்டத்தின் மதிப்பீடு 285.06 லட்சம் ரூபாய். அனுமதிக் கப்பட்ட தொகை 396.35 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக் கிறது. இத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் பெரும்பான்மை யான பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இறுதியாக எல்லா வேலை களும் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிந்துவிடும்